பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**07 07 2026** **TUESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா — இந்தோனேஷியா இடையேயான உறவு பசிபிக் மண்டலத்தில் அமைதிக்கும், அரசியல் நிலைப்பாட்டை உறுதி செய்யவும் வழிவகுக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. பருத்தி சாகுபடியின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

3. எஃகு தொழில்துறைக்கு உத்வேகம் அளிப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

4. கேரளத்தில் பெய்துவரும் கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் மூன்று தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

5. உலகக் கோப்பை கால்பந்து போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அர்ஜென்டினா இன்று எகிப்தை எதிர்கொள்கிறது.

.. இனி விரிவான செய்திகள் --

<<<<<<>>>>>>>

இந்தியா — இந்தோனேஷியா இடையேயான உறவு பசிபிக் மண்டலத்தில் அமைதிக்கும், அரசியல் நிலைப்பாட்டை உறுதி செய்யவும் வழிவகுக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்தோனேஷியா தலைநகர் ஜகார்தாவில் அந்நாட்டு நாடாளுமன்ற கூட்டுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், இருதரப்பு உறவுகள் நீண்டகால நம்பிக்கை மற்றும் ஜனநாயக மாண்புகளின்மீது கட்டி எழுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்தோ — பசிபிக் மண்டலத்தில் தாராள, வெளிப்படையான மற்றும் உள்ளார்ந்த பொருளாதாரத்தை வளர்ச்சியை கொண்டுவர வேண்டும் என்பதில் இந்தியா உறுதியுடன் செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த மண்டலத்தில் கடல்சார் மற்றும் விமான போக்குவரத்து தடையின்றி செயல்பட வேண்டும் என்று இந்தியா விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தோ — பசிபிக் மண்டலத்தில் அரசியல், பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வுகாண ஐ நா கொண்டுவந்துள்ள

சீர்திருத்தங்களை காலதாமதமின்றி நிறைவேற்ற வேண்டும் என்றும் பிரதமர் வலியுறுத்தினார்.

இந்தியா — இந்தோனேஷியா நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு வலுப்பெற்று வருவதாகவும், பல்வேறு துறைகளிலும் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் ஏராளமாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவின் **140** கோடி மக்களும், இந்தோனேஷியாவின் **29** கோடி மக்களும் கைகோர்த்து வளர்ச்சியின் பயன்களை பகிர்ந்துகொள்வதாகவும் பிரதமர் பெருமிதத்துடன் தெரிவித்தார்.

தீவிரவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான நடவடிக்கைகளில் கூட்டு செயற்குழு அமைப்புடன் இணைந்து இருநாடுகளும் வெற்றிகரமாக செயல்பட்டு வருவதாகவும் பிரதமர் கூறினார்.

செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தும் தொழில்நுட்பத்தை ஜகார்தா கொண்டுவருவதற்கு உதவிக்கரம் நீட்ட இந்தியா ஆர்வம் கொண்டுள்ளதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

பருத்தி உற்பத்தியை அதிகரிப்பதற்கான இயக்கம் குறித்து மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் மற்றும் வேளாண் துறை

அதிகாரிகள், குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணை சந்தித்து எடுத்துரைத்தனர்.

குடியரசு துணைத்தலைவர் மாளிகையில் நடைபெற்ற இந்த சந்திப்பில், பருத்தி உற்பத்திக்கான வேளாண் கட்டமைப்பை நாடு முழுவதும் விரிவுபடுத்துவதற்கான இந்த இயக்கத்தை தாம் வரவேற்பதாக குடியரசு துணைத்தலைவர் கூறினார்.

புதுமையான செயல் திட்டங்கள் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளை குறித்த நேரத்தில் செய்து முடிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பருத்தி சாகுபடியின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்றும் அவர் கூறினார்.

பருத்தி உற்பத்திக்கான இலக்குகளை தீர்மானித்து அதற்கான செயல்திட்டங்களை வகுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

உலகத்தரத்திலான பருத்தியை உற்பத்தி செய்து, வர்த்தக போட்டிகளை எதிர்கொள்ள இந்தியா தயாராக இருக்க வேண்டும் என்றும் திரு சி பி ராதாகிருஷ்ணன் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>>

அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் திட்டத்தின்கீழ், 70 லட்சம் மரக்கன்றுகள் நடும் நிகழ்வை மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று புதுதில்லியில் தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், தில்லி மாநகரில் சுற்றுச்சூழலை மேம்படுத்துவதற்கு தில்லி அரசு மேற்கொண்டுவரும் புதிய முயற்சிகளுக்கு தமது பாராட்டுகளை தெரிவிப்பதாகவும் கூறினார்.

தில்லி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் ஐந்தாயிரம் ஹெக்டேர் நிலத்தை வனப்பகுதியாக தில்லி அரசு அறிவித்துள்ளது மிக முக்கியமான முடிவு என்றும் அவர் குறிப்பிட்டார்.

மத்திய அரசும், தில்லி அரசும் இணைந்து அடுத்த நான்காண்டுகளில் ஆறாயிரத்து 300 ஹெக்டேர் நிலத்தை பசுமை வளையத்திற்குள் கொண்டுவர நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இப்பகுதியில் 70 குளங்கள், சிறிய உணவகங்கள் மற்றும் தொல்பொருள் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படும் என்றும் திரு அமித் ஷா கூறினார்.

<<<<<<>>>>>>>

எஃகு தொழில்துறைக்கு உத்வேகம் அளிப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், உலக அளவிலான போட்டிகளை எதிர்கொள்ளும் வகையில் எஃகு தொழில்துறை மேம்படுத்தப்பட வேண்டியது அவசியம் என்று கூறியுள்ளார்.

கனரக தொழில்கள் மற்றும் எஃகு துறை அமைச்சர் திரு குமாரசாமியுடன் இதுகுறித்து தாம் ஆலோசனை நடத்தியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எஃகு குறிப்பாக, துருபிடிக்காத எஃகு உற்பத்தியை மேம்படுத்துவது குறித்து ஆக்கப்பூர்வமாக தாங்கள் விவாதித்ததாகவும் திரு கோயல் தெரிவித்துள்ளார்.

இந்த துறையில் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகள் குறித்து ஆராயப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

சுயசார்பு மிக்க இந்தியாவை கட்டமைப்பதில் எஃகு துறை முக்கிய பங்காற்றுவதாகவும் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>>

விளையாட்டுகள், ஒழுக்கத்தையும், குழுவாக இணைந்து செயல்பட்டு வெற்றிபெறும் ஆற்றலையும் அளிப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று துரந்த் கோப்பை கால்பந்து போட்டிகளுக்கான சுழற்கோப்பைகளை வெளியிட்டு பேசிய அவர், கால்பந்து போட்டிகள் தனித்துவம் மிக்க ஆற்றலை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பை விளையாட்டு வீரர்களுக்கு அளிப்பதாக கூறினார்.

இந்தியாவில் கால்பந்து போட்டிகளை மேலும் ஊக்குவிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

கால்பந்தாட்ட வீரர்களுக்கான வாய்ப்புகளையும், அங்கீகாரத்தையும் அளிப்பதன் மூலம், இந்த விளையாட்டை தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் விரிவாக்கம் செய்ய முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இப்போட்டிகளில் சிறப்பாக விளையாடி பெருமை சேர்க்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

இவ்வாண்டு துரந்த் கோப்பை விளையாட்டுகளில் இலங்கை அணியும் பங்கேற்பது தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாக அவர் தெரிவித்தார்.

துரந்த் கோப்பை போட்டிகளில் இவ்வாண்டு புதிதாக இணைந்திருக்கும் அணிகள் சிறப்பாக விளையாட வேண்டும் என்று அவர் கூறினார்.

அனைத்து அணிகளுக்குமே தமது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவிப்பதாக குடியரசுத் தலைவர் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>>

கேரளத்தில் பெய்துவரும் கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் மூன்று தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

வயநாடு மாவட்டம் கல்லாடி என்ற இடத்தில் சுரங்கப் பணியில் இந்த தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தபோது, நிலச்சரிவு ஏற்பட்டதால், சுரங்கத்திற்குள் தொழிலாளர்கள் சிக்கியுள்ளனர்.

மூன்று பேர் உயிரிழந்துள்ள நிலையில், ஒன்பது பேர் மீட்கப்பட்டு அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், இடிபாடுகளுக்கு இடையே சிக்கியுள்ள ஆறு தொழிலாளர்களை மீட்கும் பணியில் தீயணைப்பு மற்றும் பேரிடர் மீட்புப்படையினர் மேற்கொண்டுள்ளனர்.

இப்பகுதியில் சென்ற வாகனங்களும் நிலச்சரிவில் சிக்கியுள்ளன.

இதனிடையே, வயநாடு, கோழிக்கோடு மாவட்டங்களில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது.

பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகளுக்கு மக்கள் செல்ல வேண்டாம் என கேரள அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

வயநாட்டில் சுரங்கப்பணிகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

கல்வி நிறுவனங்களுக்கு நாளை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>>

கேரளத்தில் சுகாதார கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கு மத்திய அரசு தேவையான உதவிகளை செய்யும் என்று சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

அம்மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் சுகாதாரத் திட்டங்கள் குறித்து அம்மாநில சுகாதாரத்துறை அமைச்சர் திரு முரளிதரனுடன் ஆய்வு மேற்கொண்ட திரு ஜெ பி நட்டா, திட்டங்களை திறம்பட செயல்படுத்திவரும் மாநில அரசுக்கு தமது பாராட்டுகளையும் தெரிவித்தார்.

மத்திய அரசுடன் இணைந்து, தேசிய சுகாதாரத் திட்டங்களை மக்களுக்கு கொண்டு சேர்ப்பதில் மாநில அரசுகள் முக்கிய பங்காற்றி வருவதாகவும் அவர் கூறினார்.

காசநோய் ஒழிப்பு திட்டம், இலவச மருந்துகள் மற்றும் மருத்துவப் பரிசோதனைத் திட்டங்கள், தேசிய சுகாதார இயக்கம், உணவு பாதுகாப்பு உள்ளிட்ட திட்டங்களை மாநில அரசுகள் சிறப்பாக செயல்படுத்த வேண்டும் என்றும் திரு ஜெ பி நட்டா கேட்டுக்கொண்டார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் பேசிய கேரளம் சுகாதாரத்துறை அமைச்சர் திரு முரளிதரன், கேரளத்தில் மத்திய அரசின் ஆதரவுடன்

பல்வேறு முன்னோடி மருத்துவத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

மக்களுக்கான மருத்துவ சேவையை வலுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மாநில அரசு முன்னெடுத்து செல்லும் என்றும் திரு முரளிதரன் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>>

இயற்கை இழைகளால் தயாரிக்கப்படும் ஆடைகள் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் நோக்கில், சணல் மற்றும் மரக்கூழ் கலந்து தயாரிக்கப்பட்ட ஆடைகளை காமன்வெல்த் போட்டிகளில் பங்கேற்கும் இந்திய தடகள வீரர்களுக்கு வழங்கப்படும் என்று ஜவுளி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சணல் வாரியம் இந்த வகை நாரிழையில் தயாரிக்கப்படும் துணி வகைகளை தயாரித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காமன்வெல்த் போட்டிகளில் பங்கேற்கும் இந்திய தடகள வீரர்களுக்கு தயாரிக்கப்பட்ட ஆடைகள் இன்று புதுதில்லியிலிருந்து அனுப்பிவைக்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் ஜவுளித்துறை அமைச்சர் திரு கிரிராஜ் சிங், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக் கோப்பை கால்பந்து போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அர்ஜென்டினா இன்று எகிப்தை எதிர்கொள்கிறது.

இப்போட்டி அட்லாண்டாவில் இரவு மணி **9.30**க்கு தொடங்குகிறது.

நள்ளிரவு **1.30** மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் சுவிட்சர்லாந்து - கொலம்பியாவை எதிர்கொள்கிறது.

---------------

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 3வது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

**Nottingham**-ல் இப்போட்டி இரவு 10 மணிக்கு தொடங்குகிறது

------------------

<<<<<<END>>>>>>>